


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (30.12.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கான ஓய்வூதியத் திட்டங்கள் குறித்து ஆராய்ந்திட அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையினை குழுவின் தலைவரும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளருமான ககன்தீப் சிங் பேடி, வழங்கினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் த. உதயச்சந்திரன், நிதித்துறை துணைச் செயலாளர் (வரவுசெலவு) பிரத்திக் தாயள், குழு உறுப்பினர் டாக்டர் கே.ஆர்.சண்முகம் ஆகியோர் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (30.12.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்ச் செய்தி வாசிப்பாளர்கள் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தலைவர் எம். சண்முகவேல், பொதுச்செயலாளர் கிறிஸ்டோபர் தேவநேசன், பொருளாளர் க.பாலசுப்ரமணி, துணைத் தலைவர் திருமதி கீதா சம்பத்குமார், துணைப் பொதுச் செயலாளர்கள் எம். பால கணேஷ், திருமதி எஸ்.வி. கௌரி, திருமதி ஜீவா, செயற்குழு உறுப்பினர்கள் திருமதி எஸ். பிருந்தா, திருமதி பி. பூர்ணிமா, திருமதி ஜெ. மைதிலி கோபிநாத், திருமதி எம். மஞ்சுளா, திருமதி சங்கீதா உத்தம் குமார், எல். முனிசாமி, திருமதி கே. உமா மகேஸ்வரி, திருமதி வி. மோகனப்பிரியா, எ.சிவகுமார், அருண் மதிவாணன், திருமதி ஹர்ஷினி, ஜி.சுரேஷ்ராஜன், கே. பத்மநாபன், திருமதி ஏ. கிருஷ்ணவேணி ஆகியோர் சந்தித்து, வாழ்த்து பெற்றனர்.

### “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி”

# சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, டிச.31-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 8.12.2025 அன்று என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற தலைப்பில் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்ற திமுக மாவட்ட கழக செயலாளர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட செயல்திட்டத்தின் படி 31.12.2025 புதன்கிழமை இன்று சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள் விவரம் வருமாறு :-



**கொளத்தூர் கிழக்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 70அ , பாகம் 237. இடம்: 4, வசந்த கார்ன் மெயின் ரோடு, அயனாவரம், சென்னை-23.

மாலை: 4.30 மணி: வட்டம் 70அ , பாகம் 238. இடம்: 11, மதுரை தெரு, ஜான் கில்பர்ட் ஹவுஸ்

மாலை: 5.00 மணி: வட்டம் 70அ , பாகம் 239. இடம்: Dr.அம்பேத்கர் மன்றம், வசந்த கார்டன் மெயின் தெரு, அயனாவரம், சென்னை-23.

மாலை: 5.30 மணி: வட்டம் 70அ , பாகம் 240. இடம்: 15, 1வது லேன், அயனாவரம், சென்னை-23.

**கொளத்தூர் மேற்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 64 , பாகம் 3 , இடம்: பாரத்ராஜீவ் நகர், 3வது தெரு, கொளத்தூர்-99.

மாலை: 4.30 மணி: வட்டம் 64 , பாகம் 15 , இடம்: கணேஷ்நகர், கொளத்தூர் -99.

மாலை: 5.00 மணி: வட்டம் 65 , பாகம் 51 இடம்: வெற்றிவேல் நகர், கொளத்தூர்-99

மாலை: 5.30 மணி: வட்டம் 65 , பாகம் 80, இடம்: அறிஞர் அண்ணா தெரு, வினோபா நகர், கொளத்தூர்-99.

மாலை: 6.00 மணி: வட்டம் 69 , பாகம் 210 இடம்: குமரன்நகர், சென்னை-82.

மாலை: 6.30 மணி: வட்டம் 69 , பாகம் 211 இடம்: சாய் நகர், சென்னை-82.

**துறைமுகம் கிழக்கு பகுதி**

மாலை: 6.00 மணி: வட்டம் 60 (அ) , பாகம் 116, 117, 118, 119 இடம்: எண்: 22 ஜோன்ஸ் தெரு, மண்ணடி சென்னை-1

**துறைமுகம் மேற்கு பகுதி**

மாலை: 5.00 மணி: வட்டம் 54 , பாகம் 10, 11, 12, 13. இடம்: CSI பள்ளி, கொண்டலையர் தெரு, கொண்டிதோப்பு, சென்னை.

**எழும்பூர் வடக்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 78அ , பாகம் 75, 76, 77.

**எழும்பூர் தெற்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 61 , பாகம் 152, 153, 154. இடம்: சேட் காலனி, எக்மோர்

மேற்கண்ட பாகங்களில் நடைபெறும் கூட்டங்களில் அந்தந்த தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட/ பகுதி / வட்ட நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள், BLA2, BDA, BLC ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் - மாவட்டச் செயலாளர் பி.கே. சேகர் பாபு அறிவித்துள்ளார்.

### பழுதுகளை நீக்கி

# சாலைப் பராமரிப்பை நல்ல முறையில் செய்திட வேண்டும்!

## ஆய்வுக்கூடத்தில் – அமைச்சர் எ.வ.வேலு அறிவுறுத்தல்!

சென்னை, டிச.31-

சென்னை, கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் உள்ள கூட்டரங்கில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

நேற்று (30.12.2025) சென்னை, கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் உள்ள கூட்டரங்கில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் அனைத்து தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள், கோட்டப் பொறியாளர்கள் பங்கு பெற்றனர்.

ஆய்வுக் கூட்டத்தை தொடங்கி வைத்து அமைச்சர் அவர்கள், இதுவரை மேற்கொண்டப் பணிகள் குறித்தும், நிதி ஒதுக்கீடு செலவின விவரங்கள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டு, தக்க அறிவுரைகள் வழங்கினார்.

**முட்புதர்களை அகற்ற வேண்டும்!**

சாலைப் பழுதுகள், அதாவது சாலையில் ஏற்பட்ட நொடிகள், பேட்ச் ஒர்க் செய்து நல்ல முறையில் பராமரிக்க வேண்டும் என்றும், சாலை ஓரங்களில் உள்ள முட்புதர்களை அகற்ற வேண்டும் என்றும் மலைப் பிரதேசங்களில் சாலை ஓரங்களில் உள்ள முட் புதர்களை அகற்ற வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

சாலைப் புருவங்கள் தார்ச் சாலையின் மட்டத்தைவிட உயரமாக உள்ளதால் மழைநீர் வடிய இயலாத நிலை உள்ளது. மழைநீர் வடிய ஏதுவாக சாலை புருவங்களை சீரமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

கிலோ மீட்டர் கற்கள் மற்றும் பர்லாங் கற்கள் இல்லாத இடங்களை கண்டறிந்து அந்த இடங்களில் கற்களை நடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**ஆய்வு செய்து அறிக்கை அனுப்ப வேண்டும்!**

இந்தப் பணிகளை எல்லாம் ஆய்வு செய்ய நியமனம் செய்யப்பட்டுள்ள கண்காணிப்பு அலுவலர்கள் உடனடியாக ஆய்வு செய்து அறிக்கை அனுப்ப வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

அமைச்சர் அவர்களின் தொடக்க உரையை தொடர்ந்து நெடுஞ்சாலைத்துறையின் செயல்பாடுகளை ஒவ்வொன்றாக ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் டாக்டர் இரா.செல்வராஜ், நெடுஞ்சாலைத்துறை திட்ட இயக்குநர் தெ.பாஸ்கர பாண்டியன், தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கு. கோ.சத்தியபிரகாஷ், சிறப்பு அலுவலர் (தொழில் நுட்பம்) இரா.சந்திரசேகர், முதன்மை இயக்குநர் இரா. செல்லதுரை, தரக்கட்டுப்பாடு இயக்குநர் எம்.சரவணன், கண்காணிப்புப் பொறியாளர்கள், கோட்ட பொறியாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இளையான்குடி அருகே சாலை கிராமத்தில்

# மாநில மகளிர் கால்பந்தாட்டப் போட்டி!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்தார்! மு.தென்னவன் – தமிழரசி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சிவகங்கை, டிச. 31-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி தெற்கு ஒன்றிய கழகம் தெற்குஒன்றிய இளைஞர் அணி சார்பில்கழக இளைஞரணி செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர் கள் பிறந்த நாளை முன்னிட்டு மாநில அளவிலான மகளிருக்கான மின்னொளி கபடி போட்டிசாலை கிராமத்தில் இளையான்குடி தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பா.தனசேகரன் ஏற்பாட்டின் பேரில் இரண்டு நாட்கள் மகளிர் கபடி போட்டி நடைபெற்றது.

இந்த போட்டி தெற்கு ஒன்றிய செயலாளர் ஆறு. செல்வராஜன் தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கே.எம்.பொற்கோ, கே.எஸ். மஹாதீர், கிங் கார்த்தி, இ.நைனாமுகமது ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இளையான்குடி தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பா. தனசேகரன் வரவேற்று பேசினார்.

மாநிலம் முழுவதிலுமிருந்து சிவகங்கை, மதுரை, ராமநாதபுரம், தஞ்சாவூர், தேனி, போடி, விருதுநகர் உள்பட்ட 20 மாவட்டங்களிலிருந்து மகளிர் கபடி வீரர்கள் பங்கேற்றார்கள்.

இந்த மகளிர் கபடிபோட்டியினை சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. மாவட் டக் கழகத் துணைச் செயலாளர் த.சேங்கை மாறன் ஆகியோர் பேசினார்கள். இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற மானா மதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் பெண்களுடன் கபடி விளையாடியது அனைவரின் பாராட்டினை பெற்றது.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ. சுப. மதியரசன், பொதுக்குழு உறுப்பினர் த.உதயகுமார், மானா மதுரை தொகுதி பொறுப்பாளர் கே. ஆர்.என். போஸ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்அ. முகமது, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ.வல்ல பாய், நிர்வாகிகள் ரெட்சேகர், தனபால், பா. கார்த்திக், செல்வி சாத்தையா மலையரசி ரவிச்சந்திரன், வினோத், பா.சேகர், குமணன், நாகசுந்தரம், சிறுபான்மை அணி எம்.ஏ. எஸ்.இ.நாசர், கே.ராஜகுரு, கே. மருது, தனமணிகண்டன், பரமேஸ்வரன், பிரின்ஸ் கிரேசி, சேது செல்வம், சங்கரலிங்கம், ஒன்றிய செயலாளர்கள் வே.தமிழ்மா றன், கா .வெங்கட்ராமன் , ஒன்றிய துணை செயலாளர் எஸ்.முத்துகுமார் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை இளையான்குடி தெற்கு ஒன்றிய செயலாளர் ஆறு. செல்வராஜன் இளையான்குடி ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பா. தனசேகரன் இ.நைனாமுகமது தலைமையில் நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.

### வே.டில்லிபாபு தலைமை! அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

# ஆலந்தூர் வடக்குப் பகுதி பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் ஆலந்தூர் ப.குணாளன் அறிக்கை!

சென்னை,டிச.31-

ஆலந்தூர் வடக்கு பகுதிச் செயலாளர் ஆலந்தூர் ப.குணாளன் அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஆலந்தூர் வடக்கு பகுதி தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (31.12.2025 - புதன்கிழமை) மாலை 3:00 மணியளவில், ஆலந்தூர் கத்திபாராவில் (ஜோதி திரையரங்கம் அருகே) அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் பகுதி அவைத் தலைவர் வே.டில்லிபாபு தலைமையில், பகுதி நிர்வாகிகளான கோ.கோட்டீஸ்வரன், ஐ.அழகேசன், ஜெயாசெல்வம், எம். சையத் அபுதாகீர் ஆகியோர் வரவேற்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்துக் கொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

எனவே ஆலந்தூர் வடக்கு பகுதிக்கு உட்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பகுதி- அனைத்து அணிகளின் நிர்வாகிகள், பாக முகவர்கள்(BLA-2), வட்ட இளைஞர் அணி-மாணவர் அணி-மகளிர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள்,கழகத் தோழர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்

பொருள்

1).கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் ஜனவரி-5ஆம் தேதி மடி கணினி வழங்க நந்தம்பாக்கம் வர்த்தக மையம் வருவது தொடர்பாக.

ஜனவரி-7ல் கழக இளைஞர் அணி செயலாளர்,மாண்புமிகு தமிழ்நாடு துணை முதல்வர், உதயநிதிஸ்டாலின் அவர்கள் பட்ரோடு மாண்ட்போர்ட் பள்ளி, மற்றும் ஆலந்தூர் புதுத் தெருவில் நடைபெறும் பொங்கல் விழா தொடர்பாக,

வாக்காளர் திருத்தம் மற்றும் புதிய வாக்காளர் சேர்க்கை தொடர்பாக

இவ்வாறு ஆலந்தூர் வடக்கு பகுதிச் செயலாளர் ஆலந்தூர் ப.குணாளன் தெரிவித்துள்ளார்.





மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் துணை முதலமைச்சர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் மூத்த முன்னோடிகள் 200 பேருக்கு மாதம் தோறும் அரிசி மளிகை சாமான்கள் வழங்கும் விழா பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் 19வது வட்டம் மாத்தூரில் நடைபெற்றது. இதில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்பி கலந்து கொண்டு சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அறிவழகி பாலகிருஷ்ணன், வீ. கவி கணேசன், தி.நகர் மோகன், வட்ட செயலாளர்கள் மாத்தூர் கா. தாமரைச்செல்வன், கே அங்குசாமி இ.கண்ணப்பன், கே. கருணாகரன், பி.எஸ். சந்துரு,வி.ஆர். குப்பன்,க. காசிநாதன், மஞ்சம்பாக்கம் பாபு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.



சென்னை, கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் உள்ள கூட்டரங்கில், நேற்று (30.12.2025) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நெடுஞ்சாலைத்துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வுக் கூட்டத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் டாக்டர் இரா. செல்வராஜ், நெடுஞ்சாலைத்துறை திட்ட இயக்குநர் தெ.பாஸ்கர பாண்டியன், தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருத்தணி ஒன்றியம் பீர் குப்பம் ஊராட்சியில் 30 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் நேரடி கொள்முதல் நிலையம் அமைக்கும் பணி நடைபெற்றது இதில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர்கள் கே.ராஜேந்திரன், என்.கிருஷ்ணன் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் உள்ளனர்